12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி

11-வது பதினெண் சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



இந்துமதத் தந்தை
குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரார்



தஞ்சைப் பெரிய
கோயிலைக் கட்டிய சித்தர்
காவிரியாற்றங்கரைக் கருவூரார்

# குருதேவர்

காணிக்கை ரூ. 1—00

## இந்துமத வரலாற்றுப் பெருண்மைகள்

(I) பிறப்பிடம்: 'இளமுறியா' கண்டம் (The Last Lemuria) எனும் கடலில் மறைந்த 'குமரிக்கண்டம்'

(II) காலம் பதினெண் சித்தர்களால் அனாதி காலத்தில் 43, 73, 085 ஆண்டு-களுக்கு முன்னால் தோற்றுவிக்கப்பட்டது.

(III) மொழி: தமிழ் மொழி

(IV) வழிபாட்டு நிலையம்: 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

(V) இந்துமதக் காவலர்: 48வகைப் பதினெண் சித்தர் பீடாதிபதிகள்

(VI) இந்துமதம் வளர்ப்பவர்: இம்மண்ணுலகில் தோன்றும் 48வகைச் சித்தர்கள், 48-வகை வழிபடுநிலையினர், அருட் சத்தி பெற்றோர் (பூசாறி, ஆச்சாரி, மருளாளி, அருளாளி.........)

(VII) இந்துமத நூல்கள்: நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம்.........எனும் 48 வகை மூல நூல்கள்.

(VIII) இந்துமதப் பயன்கள்: தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு. எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

இந்துமதம் என்பது முன்னோர் வழிபாடு; மூத்தோர் வழி நடத்தல்.

# ‘கல்கண்டு’ (க்கு) பதில்

## [ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களுடன் ஒரு பேட்டி]

கே: பதினெண் சித்தர்கள் பற்றி.........?

ப: தாங்கள் கண்டறிந்த உண்மைகளை முழுவதுமாக உலகுக்கு எடுத்துச் சொல்லாமல் தங்களோடு புதைந்து போகும் படியாகச் செய்த பித்தர்கள் [ஆதாரம்: கல்கண்டு – 27—9—84 கிலோ:36 கிராம் 37]

கே: பதினெண் சித்தர்களின் வாரிசான தாங்கள் தங்களுடைய கருத்துக்-களை செய்தியேடு உலகத்துக்கு அறிவிக்கவில்லையா! மேலே உள்ள விமரிசனத்துக்கு? என்ன பதில் கூறுகின்றீர்கள்.

ப: இன்றைய ‘கல்கண்டு’ ஆசிரியர் லேனா, தமிழ்வாணன் அவர்களும் இவரின் தந்தையும் முந்தைய ஆசிரியருமான தமிழ்வாணன் அவர்களும் ‘பதினெண் சித்தர்களின் கருத்துக்களை இன்றைய பதினெண் சித்தர் பீடாதிபதியான எம்மிட-மிருந்தும் எம்முடைய இயக்க அடியான்களிடமிருந்தும் அச்சிட்ட அறிக்கைகளாகவும், நூல்களாகவும், மாத ஏடுகளாகவும் பெற்றிருக்கிறார்கள். ஆனால், தங்களுடைய கல்கண்டு வார ஏட்டில் இவற்றைப் பெற்றுக்கொண்டதற்கான அறிவிப்பும் வெளி-யிட்டதில்லை. எந்த பதிலும் தெரிவித்ததில்லை. சித்தர்களின் கருத்துக்களை வெளி-யிட்டதுமில்லை.

கே: ‘கல்கண்டு’ ஆசிரியர் மட்டும் தானா? மற்ற அனைத்து ஏடுகளுமா?

ப. இவர்களைப்போலத்தான் ஏறத்தாழ தமிழகத்தில் உள்ள எல்லா நாளேடு, வார ஏடு, திங்களேடு ஆசிரியர்களும் நடந்து கொள்கின்றார்கள். ஆனால் வாய் கூசாமல் ‘சித்தர்கள் தங்கள் கருத்துக்களை வெளியில் சொல்லாத பித்தர்கள்’ என்று குறை கூறி குற்றம் சாட்டி உள்ளனர். உண்மையில் சித்தர்களின் கருத்துக்-களை வெளியே வராமல் தடுக்கின்ற ‘எத்தர்கள்’ இவர்கள்தான்.

கே: பதினெண் சித்தர்களைப் பற்றி என்ன வைத்துள்ளீர்கள்? செய்தி-யேடு உலகம் என்ன செய்யவில்லை? தமிழகத்தின் நிலை என்ன?

ப: சித்தர்களின் வரலாறு, எழுதாக்கிளவிகள், மறைகள், முறைகள், நெறிகள், மரபுகள், ஒழுகலாறுகள், விதிகள், படிகள்...;அவர்களின்கலை, இலக்கிய, தத்துவ, மருத்துவ, சமய, சமுதாய சாதனைகள் அனைத்தும் எண்ணற்ற கட்டுரைகளாக, நூல்களாக கோப்புக்களில் தயாராக இருக்கின்றன.

இவைகளை வெளியிடுவதற்கு இன்றைய லேனாதமிழ்வாணனோ, பிற ஆசிரியர்-களோ, ஏடுகளோ, பதிப்பகங்களோ, தனி மனிதர்களோ, ‘தமிழ் வாழ்க’ என்று முழக்கமிடும் அரசியல்வாதிகளோ, தமிழுக்காக இருக்கும் மடங்களோ! தமிழ்நாட்டில் இருக்கும் அரசோ முன்வரத் தயாரா? தயாரா? தயாரா?

தமிழ் மொழியை முறையாகவும், முழுமையாகவும் கற்றிட்டவர் இதுவரை தமிழ்நாட்டில் தலைவராக வரவில்லை என்ற ஒரே காரணத்தினால்தான் ‘எடுத்தோம்! கவிழ்த்தோம்’ என்பதுபோல் தமிழின் வளர்ச்சிக்காக எடுக்கப்படும் விழாக்களும் உருவாக்கப்படும் அமைப்புக்களும் உண்மையில் ஊசிமுனையளவு கூட தமிழ் மொழியின் நலத்துக்கோ, வளத்துக்கோ, வலிவுக்கோ, பொலிவுக்கோ, வடிவமைப்-புக்கோ, பெருமைக்கோ, உரிமைக்கோ, பாதுகாப்புக்கோ பயன்படவே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை. இது முக்காலும் சத்தியம்.

பேட்டி கண்டவர்: சித்தரடியான் கு. சத்தியமூர்த்தி B.Com.,

# குருதேவர்

[இயக்க அறிக்கை]



சொல்லடி நாயனார்
பெரியார் ஈ. வெ. ரா.



போத்தர் மோகன்தாசு
கரம்சந்த் காந்தி



நவநாதசித்தர்
கார்ல்மார்க்சு



ஞான சித்தர்
ஆதிசங்கரர்

---

அறிக்கை: 10 வெளியீடு 26-9-84

இ ம இ. பதிவு எண் 135/83

[பண்பாட்டுக் கழகம்]

ஆசிரியர் குழு:

இ. ம. இ; அ வி தி; க. வ. க; அ. ஆ க; உ. ம. அ. கு. முதலியவற்றின் வட்டாரத் தலைவர்கள்.

### வணக்கவுரை !

இந்து மதத்தை தவறாகப் பொருள் படுத்தியும், தவறானப் பாதையில் இட்டுச் செல்வதிலும் நாட்டில் ஒரு சிறு கூட்டம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றது. 'ஞாலகுரு சித்தர் கருவூரார்' வாழ்கின்ற இக்காலத்திலும் இத்தீயபணிகள் தொடர்ந்து நடைபெறாவண்ணம் தடுக்கவே பல்வேறு கருத்துக்களை உங்களின் சிந்தனைக்கு, செயல்-களுக்கு முன்வைக்கின்றோம்! ஆராய்ந்து உணர்ந்து பின்னரே செயல்படுத்த அழைக்-கின்றோம்.

ஒரே நாளில் நாடும் சமுதாயமும் திருந்திவிடும் என்று நினைக்கவில்லை மெல்ல நாடோறும் வளர்ந்துதான் 'முழுநிலா' ஒளி வீசுவது போல் நமது கொள்கைகள், செயல் திட்டங்கள் யாவும் இம்மக்களிடை-யே மலர்ந்து மணம் வீசும் என்பதில் ஐயமில்லை!

— சி கவிக்குமார்

### வாழ்க தமிழ்ப் பண்பாடு!

கடந்த பத்து மாதங்களாகத் தொடர்ந்து தமிழில் வெளிவரக்கூடிய அனைத்து நாத்திக ஆத்திக நாளேடுகள், வார-ஏடுகள், மாத மலர்கள் முதலிய அனைத்துக்-கும் தமிழின நாத்திக ஆத்திக சமயசமுதாய கலை இலக்கிய அரசியல் தலைவர்களுக்கும்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

தொடர்பு :

1. பரமாச்சாரியார்: நெ. சேவுகன்
   C/o. காதிவசுத்திராலயம்
   கொட்டாம்பட்டி (P.o.) Pin-625103.

2) பிறமாச்சாரியார்:
   சி. கவிக்குமார் B. Sc.,
   56, N. G. O. காலனி,
   பொன்னேரி 601 204.

3) தெய்வீகாச்சாரியார்:
   சோ. இரவீந்திரன்
   C/o. சித்தர், E. S. I. செம்பியம்,
   பெரம்பூர், சென்னை-600 011.

## உண்மையான இந்து மத உயர்ச்சிக்காக வட ஆரிய வேத நெறிக்கு கண்டிப்பு (தொடர்ச்சி)

5. காயந்திரி மந்தரம் பெரியவர், சிறியவர், ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவருமே ஓதலாம் என்பதே பதினெண் சித்தர்கள் வ்குத்தநெறி இதன் படி யாராக இருந்தாலும் தொடர்ந்து பதினெட்டாண்டுகள் காயந்திரிமந்தரத்தை அன்றாடம் ஆறுகாலம் ஓதி வருவார்களே-யானால் அவரவர் வாழ்வுக்குத் தேவையான சத்திகளைப் போதுமான அளவுபெற்றுக்கொள்வார்கள் என்பதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!!

குறிப்பு: இதை விடுத்து வட ஆரிய வேத நெறியினர் காயந்திரி மந்தரத்தால் சத்திகளும், சித்திகளும் கிடைத்து விட்டதாகப் பொய்கூறி பிறருக்கு அருள் வழங்க முற்படுகின்றூர்கள், இது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது. ஏனெனில், பதினெண் சித்தர்கள் மிகத் தெளிவாக காயந்திரி மந்தரத்தால் கிடைக்கும் அருட்சத்தியால் பிறருக்கு அருள் வழங்கவோ, மந்திரிக்கவோ முடியாது என்று கூறுகின்றூர்கள். வட ஆரிய வேதநெறியினர் இதைச்செய்வதால் இந்தத் தவறுகளை இ. ம. இ. கண்டிக்கின்றது.

6. இவ்வாறு பதினெட்டாண்டுகள் காயந்திரி மந்தரம் ஓதியபின்புதான் காயந்திரி மந்தரத்தின் பிற பகுதிகளான காயந்திரி மாந்தரம், காயந்திரி மாந்தரீகம், காயந்திரிமந்திரம், காயந்திரி மந்திறம் எனும் நான்கையும் குரு வழியாக முறையாக அவரவர் பக்குவத்துக்கும் தேவைக்கும் ஏற்ப கற்றுக்கொள்ளவேண்டும். ஆனல் காயந்திரி மந்தரத்தையே தவருகப் பொருள் படுத்திவரும் வட ஆரிய வேதநெறியினர் இந்த மற்ற நான்கைப் பற்றிக் குறிக்கவோ, குறிப்பிடவோ, அறிந்து கொள்ளவோ முயலவே வில்லே. இத்தகைய செயல்களினுல் வளம் நிறைந்த இந்து மதம் பெரும் நலிவுக்கும், மெலிவுக்கும் உள்ளாகி வருகின்றது. இத்தகைய நிலேயை உருவாக்கும் வட ஆரிய வேதநெறியினரை இ. ம. இ. கண்டிக்கிறது

7. பதினெண் சித்தர்கள் படைத்த காயந்திரி மந்தரத்தை பதினெட்டாண்டுகள் ஓதியவர்கள் அகம்பாவம், ஆணவம், பேராசை, சொந்தபந்தப்பாசம்,............ முதலியவைகளையெல்லாம் வென்று இல்லறத் துறவியாக ''அந்தணர்'' ஆகிடுகின்றனர். இவர்கள் தொடர்ந்து குருக்களாக, ஆச்சாரியாராக, ஆதீனமாக, சன்னிதானமாக...........செயல்படலாம். இவர்கள் தொடர்ந்து ஆண், பெண் இன்பம் துய்க்கலாம் என்று தெளிவாகக் குறிக்கின்றனர். ஆனல் இவற்றையெல்லாம் மறுத்தும் மறந்துமே வட ஆரிய வேதநெறியினர் செயல்பட்டுவருவதால் இந்துமதம் செயலிழந்து பலரின் முயற்சிகளுக்கு விடை தராமல் பலத்த கேலிக்கும், கிண்டலுக்கும், ஐயங்களுக்கும், தோல்விகளுக்கும், ஏமாற்றங்களுக்கும் இடமளிக்கின்றது. இப்போக்கை வளர்த்து வரும் வட ஆரிய வேதநெறியினரை இ. ம. இ. கண்டிக்கின்றது.

8 பதினெண் சித்தர்கள் படைத்த ''காயந்திரி மந்தரம்'' அனைவரும் ஓதலாம் என்று கூறி பயன்படுத்தி வந்தனர். ஆனல் இதனைத் தங்கள் மொழியில் (சமசுக்கிருதத்தில்) மொழி பெயர்த்துப் பயன்படுத்தி வரும் வட ஆரிய வேதநெறியாளர்கள் தவருகப் பொருள் படுத்தி வருவதோடு 'பெண்கள் காயந்திரி மந்தரம் ஓதக்கூடாது'' என்று தடைவிதித்துள்ளனர். ஆண், பெண் இருவரும் சமமே! பெண்ணே சத்தி! பெண்ணே தெய்வம்!......என்றெல்லாம் படைத்து வழிபட்டு வரும் இந்து மதத்தினரை கேவலப்படுத்தும்முறையிலும் பெண்களை அடிமைப் படுத்துகின்ற முறையிலும் இக்கூற்றை கூறி வருகின்றனர். ஆனல் பதினெண் சித்தர்களோ முற்போக்குவாதிகள்!

—தொடரும்

வாழ்க தமிழ்ப் பண்பாடு!        3-வது பக்க—தொடர்ச்சி

எங்களது 'குருதேவர்' அறிக்கை அனுப்பப்படுகின்றது. ஆனால் நன்றி தெரிவித்தோ அல்லது பெற்றுக்கொண்டதற்கு ஒப்புதல் தெரிவித்தோ செய்தி அனுப்பவும் இல்லை, வெளியிடவும் இல்லை.

தமிழ்ப் பண்பாடு வளர்க! வளம் பெறுக!
வலிமை பெறுக! பொலிவு பெறுக!......

'குருதேவர்' எனும் இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கைப் பொறுப்பாளர்
ஆசிரியர், தலைமைப் பணியாளர்.

---

# அன்புள்ள சேவுக!

அன்புச் சேவுக

எமது 49-வது பிறந்தநாள் செய்தி என்பதைவிட எமது உலகியில் பணி துவங்கிய 12-வது ஆண்டு நிறைவுச் செய்தி என்ற தலைப்பிலேயே இந்த அஞ்சலை எழுதுகிறோம் யாம்

அதிகம் படிக்காதவர்கள்; ஏட்டுக்கல்வி கற்க வசதி வாய்ப்பு இல்லாதவர்கள்; படித்துவிட்டுப் படிப்பைப் பயன்படுத்தி வயிற்றுப்பிழைப்பு நடத்த வசதி வாய்ப்பு கிடைக்காதவர்கள்; பாதியிலேயே நாட்டு நடப்புக்குரிய ஏட்டுப் படிப்பைத் தொடர முடியாமல் விட்டுவிட்டவர்கள்; பிறப்பிலேயே வயிற்றுப்பிழைப்புக்காகப் போராட வேண்டிய பாட்டாளிப் பாமரக் கூலிப் பரம்பரையில் பிறந்ததால் எழுத்து வாசனையே இல்லாத தற்குறி அப்பாவிகள் என்று......இந்த நாட்டில் ஏட்டுக்கல்விக்கு அப்பாற்பட்டு வாழ்பவர்களுடனேயே நெடுங்காலம் முழுமையாகவாழ்ந்த நான்; படித்தகூட்டத்தையும், படிக்கின்ற இளைஞர் சமுதாயத்தையும் விரும்பித்தேடி ஓடிவந்து செயல்பட ஆரம்பித்திட்டேன். ஆனால், பன்னிரண்டு ஆண்டுகள் பாடுபட்டும் கூடக் கணிசமான அளவு படித்த கூட்டத்தில் தாய்மொழி, இனம், நாடு, பண்பாடு, உரிமை, பாரம்பரிய மரபு......முதலியவைகளைத் தன்னம்பிக்கையோடும் தன்மானப் பிடிப்போடும், விரும்பியேற்றுச் செயல்படுபவர்களை உருவாக்க முடியவில்லை,— அநேகமாக இனிமேலும் முடியாது! முடியாது!! முடியாது!!!முடியவேமுடியாது.

நண்ப! நமது கல்வித்திட்டங்களும், ஆசிரியர்களும், பிற இயக்க நிலைகளும்........... முழுக்க முழுக்கப் பொறுப்பில்லாத, உண்மையில்லாத, கூலித்தன்மை நிறைந்த போலிப் பண்புகள் மிகுந்த, தாயகத் துரோக விரோத உணர்வு ஊற்றெடுக்கின்ற ஆற்றலைத்தான் பெற்றிருக்கின்றன. வருங்காலம் இருளும், இன்னலும், அடிமைப்பண்பும், பொது நல விரோதப்போக்கும், தாயகத் துரோகச் சிந்தை செயலும்...... உடையதாகத்தான் இருக்க முடியும்... இதற்கென்னசெய்வது ......!?!?!.........

நோயையே சான்றாகவும், முதுமையையே ஊன்றாகவும், வறுமையையே வழித்துணையாகவும் கொண்டு பிச்சையெடுப்பவர் கூட்டம் பெருகிப் பெருகிக் காவிரியின் வெள்ளமாகிவிட்டது. வெறும் முரட்டுத்துணிச்சலும்வறட்டுப்பிடிவாதமும் உடைய அனைத்து விதமான குற்றவாளிகளுமே பெரும்பாலும் கலை, இலக்கிய, சமுதாய, அரசியல் தலைவர்களாக, வழிகாட்டிகளாக வளர்ந்து விட்டார்கள். யாருக்குமே வருங்காலத்தைப் பற்றியோ வரலாற்றுப் பெருமைகளையும் உரிமைகளையும் பற்றியோ கவலையே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை இதற்கென்ன செய்வது?

இளமைக்கால உணர்வுகளையும், கோலச் சிந்தனைகளையும்கொன்று புதைத்துவிட்டு எம்மைச்செயல்படச்செய்து எல்லா விதப்பயிற்சிகளிலும் முயற்சிகளிலும் முதிர்ந்த தேர்ச்சி பெறச் செய்து மனித

—தொடர்ச்சி 7வது பக்கம்

# சேவலோன் கலைகள் [SHAOLIN ARTS]

நாம் சமாதானம், அமைதி, வெறி
-யுணர்வைத்தடுப்பது, வன்முறை
நடவடிக்கைகளைத் தடுப்பது என்ற
பெயரால் உடல் ஓம்புவதற்கு, உடல்
நலம் செழிப்பதற்கு, உடல்வலிமை
பொலிவுறுவதற்கு, உடம்பிலுள்ள நரம்பு
-கள், தசைகள், எலும்புகள் முதலியவை
-கள் பல்வேறு வகையானப் பயிற்சிகள் பெறும்
வண்ணம் பதினெண்சித்தர்கள் படைத்துவிட்டுச்
சென்ற (Defence Arts) பாதுகாப்புக் கலைகள்
அழிந்துநலிந்துபோகும் வண்ணம்செய்திருக்கின்றோம்
இன்றைக்கு உலக விளையாட்டு அரங்கில் மல்யுத்தம்,
மற்போர், குத்துச்சண்டை, கராத்தே, (கரத்தாண்டகம்),
கோல் விளையாட்டு, வாள்வீச்சு, வேலோச்சு, பளு தூக்கி
எறிதல், (Shotput), கதைப்போர், மடு (மான்கொம்பினால்
விளையாடுவது)............ போன்றவைகள் மதித்துப் போற்றி
வளர்க்கப்படுகின்றன, புகழப்படுகின்றன, கையாளப்படுகின்றன.
ஆனால் இவற்றையெல்லாம் ஈன்றெடுத்த நாடு பாரதநாடு (அ)
தென்னிந்தியா (அ) தமிழ் நாடு. இவற்றையெல்லாம் மறந்தும்
மறுத்தும், துறந்தும் செயல்படுவது நல்லதா? இந்துமதத்தின்
பெயரால்தான் மேற்கூறிய எல்லாவகைக் கலைகளும் போற்றப் பட்டு,
வளர்க்கப்பட்டு வந்துள்ளன. இன்றைக்கும் கூட கிராமங்களில் கோயில்
திருவிழாக்களிலும், தனி மனித விழாக்களிலும், பிணச் சடங்குகளிலும் கம்பு
விளையாட்டு, கத்திச்சண்டை, குத்துச்சண்டை, சுருள்கத்து, மடு, வேல்வீச்சு,......
முதலியவைகள் விளையாடப்படுகின்றன. இந்துமதத்தில் முதல் யுகமான கிரேதா யுகத்தில் தேவகுமாரனை முருகன் சேவல் கொடியை உடையதால் 'சேவலோன்' எனக் குறிக்கப்படுகின்றான். இவன் தன்னுடைய போர்வீரர்களுக்குக்கற்றுத்தந்திருந்த போர்க்கலைகள்தான் சேவலோன் கலைகள் [Shaolin Arts] என்று சீனாவிலும் சப்பானிலும் வாழ்கின்றன.

இன்றைய குருமகா சன்னிதானம் ஞால குரு சித்தர் கருவூரார் அவர்கள் மேற்படி போர்க் கலைகளை வெறியுணர்வற்ற இந்துமத நெறியுணர்வோடு ஓகாசனக் கலைகளாகவும் தற்காப்புக் குத்துச் சண்டைகளாகவும், கோல்கால் பயிராகக் கூத்து சண்டைகளாகவும் நாற்றங் வருகின்றார். இவை இந்துமதத்துக்கும் தமிழினத்துக்கும் பெருமைச் சொத்துக்கள். இதை இந்து மக்கள் உணர்ந்து ஏற்றுப் போற்றுவார்களா?! அறிய விரும்புகின்றோம்.

மறைப்பது போல் இன்றைய இரண்டாவது சங்கராச்சாரியார் ... “பாதோ

[ஒற்றையடிப் பாதையல்ல-தொடர்ச்சி]

அந்த வழியே நடக்க ஆரம்பித்து அப்படியே அது நிலைத்து விட்டிருக்கிறது. பலர் அந்தப் பாதையை உபயோகிக்க ஆரம்பித்ததால் அது எல்லோருக்கும் பளிச்சென்று தெரிகிறது. அந்தப் பாதையை உபயோகிப்பதை நிறுத்திவிட்டால் அங்கே புல் முளைத்து விடுகிறது....................''

‘‘.........அதே மாதிரி ஹிந்து தர்மமும் ஒற்றையடிப்பாதையாகும். அதை ஒருவரும் ஆரம்பிக்கவில்லை.........''

‘‘.........ஹிந்துமதம் இந்த ஒற்றையடிப்பாதை போன்றது இதில் போகிறவர்களுக்கு கைகாட்டி மரம் அவசியமே இல்லை......''

என்று கூறியுள்ள கருத்துக்கள் இந்து மதத்தின் தெளிவான வரலாற்றுண்மையை குழிதோண்டிப் புதைப்பதாக உள்ளது. மேலும் இருட்டடிப்புக்கும், கற்பனைக்கும் மூட நம்பிக்கைக்கும் உரிய முறையில் இந்துமதத்தை வெளிப்படுத்தியுள்ளதை ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ வன்மையாக கண்டித்து திருந்தும்படிவேண்டுகிறது.

— சித்தரடியான் —

[அன்புள்ள சேவுக ! தொடர்ச்சி]

இனத்தின் முழுமையான அறிவுலக வரலாருகவே எம்மைத்தயாரித்தார் எம் தந்தை. எமது, ஏட்டறிவும் பட்டறிவும் இம்மண்ணுலகின் மாபெரும் அறிவுச் செல்வங்கள், கருத்துக் கருவூலங்கள், வரலாற்றுப்பெட்டகங்கள், அறிவுலகக் கலைக் களஞ்சியங்கள். ஆனல் யாம் எழுதிக் குவித்தவை எழுத்துமங்கித் தாள்நைந்து சிதைவதைத் தடுக்க முடியாமல் மௌன-மாகக் குருதிக் கண்ணீரே வடிக்கிறோம்

எமது கண்ணீரைத் துடைத்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் வழங்கும் வண்ணம் முப்பத்தெட்டு எனும் தேவை நிலைக்கு மேல் அ. வி. தி. முகவரிகளுடன் ‘பதி-னெண் சித்தர்களின் பூசாவிதி’ வெளிவரு-வதும்; திங்கள் இருமுறை குருதேவர் ஏடு வெளிவரும் நிலை வளர்ந்திருப்பதும்; நம் இ. ம. இ. அமைப்பினரும் இதனைச் சேர்ந்த பிற அமைப்பினரும் அடிக்கடி தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணங்கள் செய்வதும் நிகழ்ந்துள்ளன. எனவே, எமது பிறந்த நாள் விழா, நமதுபணிகளின் நிறைவு விழா-வாக, வெற்றி விழாவாக ‘இந்துமத மறுமலர்ச்சித் திருவிழாவாக’க் கொண்-டாடப்படுவதையே உரிய நிகழ்ச்சியாக ஏற்கிறோம் யாம்

ஆர்வமும், ஆற்றலும், பொறுப்பும், பொறுமையும்; குருவாணை வழிச் செயல்-படலும் மிக்க நமது நண்பர்கள் அனைவ-ரையும் வாழ்த்துகிறோம். அனைத்தும் வெற்றியாகட்டும்! நன்மையாகட்டும்!! உண்மையாகட்டும்!!!.

அன்பு

ஞாலகுரு சித்தர் கருவூரர்

குருதேவரின் 49 ஆம் பிறந்தநாள்! வணக்கங்கள்.

10—10—84 புதனன்று இந்து மதத் தந்தை குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் பன்னிரண்டாவது பதினென் சித்தர் பீடாதிபதி அவர்களின் பிறந்த நாள் அனைவரும் அறிந்ததே! அந்நன்னளில் பரமாச்சாரியார் அருள்மிகு வீரமா காளி சன்னிதானம் அவர்களும், அவரின் அடியொற்றிய மற்ற இயக்க அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் குருதேவருக்கு தங்களின் மகிழ்ச்சியையும், வணக்கங்களையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

இந்நன்னளில் குருதேவரிடமிருந்து அருளூறுப்பூசனைப் பொருட்கள் வேண்டு-வோர் ரூ. 3 மதிப்புள்ள அஞ்சல் வில்லைகளை அஞ்சலில் அனுப்பி பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

# புது ஆத்திகனுக்கு - நாத்திகனின் விளக்கவுரை

தமிழக அமைச்சர்களின் தவறான இந்துமத சிந்தனைக்காக வருந்துகிறது இந்து மறுமலர்ச்சி இயக்கம். இனியாவது தமிழக அமைச்சர்கள் உண்மையான இந்துமத இளைய தலைமுறைகளையும் தமிழினச் சன்னிதானங்களையும், ஆசாறிகளையும், ஆச்சாரியார்களையும், குருக்கள்களையும், குருமார்களையும், பூசாறிகளையும், பண்டாரங்களையும் இழிவுபடுத்த வேண்டாமென்று இந்து மறுமலர்ச்சி இயக்கமும் அதன் அமைப்புக்களும் வேண்டுகோள் விடுகின்றன.

செய்தி:- (ஆதாரம்) தினமலர் 11–9–84 பக்கம் 3

(a) சென்னை செப்-10, ''மக்கள் துயர் தீர்க்க இக்கலியுகத்தில் அவதரித்த மும்மூர்த்திகளாக காஞ்சி காமகோடி பீட ஆச்சாரியார்கள் செயல்பட்டு வருகிறார்கள்'' என்று தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் சௌந்தர்ராசன் இன்று கூறியுள்ளார்.

மேலும் அவர் (b) 'காஞ்சி பீடம் உலகப்புகழ்பெற்ற தெய்வாம்சம்பொருந்திய பீடம் தெய்வத்துடன் வைக்கப்படுவதற்கு நிகரான ஆச்சாரியார்களைப் பெற்றுள்ள பெருமைபெற்ற பீடம்' என்றும் கூறினார்.

வருந்துகிறோம் 1. தமிழகத்தில் அனாதிகாலம் முதல் பதினெண் சித்தர்களால் விலங்குகளாக இருந்த மனிசர்களை மனிதர்களாக்கிடத் தமிழ்மொழியில் வழங்கப்பட்ட இந்துமதத்தை; தமிழினத்தைச் சார்ந்த எண்ணற்ற பீட ஆச்சாரியார்களும் பீட ஆசாறியார்களும், பீடக் குருமார்களும் பீடக் குருக்கள்களும், பீடச் சன்னிதானங்களும், பீடத் தம்பிரான்களும், பீடப் பண்டாரங்களும்...... போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்தி மக்களின் துயர் போக்கி வருகிறார்கள். ஆனால், இந்து மதத்தின் உயிர்நாடியாக இருக்கும் தமிழ்மொழியை இழித்தும் பழித்தும் அழித்தும் செயல்படுவதோடு; பதினெண் சித்தர்களின் இந்து மதத் தத்துவங்களையும, விதிகளையும, முறைகளையும், நெறிகளையும........ சிதைத்துச் சீரழித்து இந்துமதத்தையே ஆற்றலற்றுப் போகும்படிச் செய்து வருகின்ற சங்கராச்சாரியார்களை எப்படி அமைச்சர் தவறுதலாகக் கலியுகத்தில் அவதரித்த மும்மூர்த்திகள் எனக் கூறலாம்? வட ஆரியர்களின் சமசுக்கிருத மொழியாலும் வேதநெறியாலும் இந்துமதத்தின் அத்திறச் சூத்திற சாத்திற நேத்திறச் சம்பிறதாயச் சடங்குகளும், சட்ட திட்டக் கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும், ஏந்தரீக மாந்தரீக தாந்தரீகப் புத்துயிர்ப்புக்கலைகளும், தனிமனிதப் பத்தி, சத்தி, சித்தி, முத்தி முறைகளும் பாழாகி தனிமனித உள்ளங்களும், இல்லங்களும், 48 வகையான வழிபாட்டுநிலையங்களும் இருண்டு கிடப்பது போதாதா? போதாதா? போதாதா?

உண்மையான இந்துமதத்தின் விரோதிகளையும் துரோகிகளையும் பாராட்டும் வண்ணம் மாண்புமிகு அமைச்சரின் பேச்சு அமைந்திருப்பதற்காக இ. ம. இ. யும், அதனைச்சார்ந்த அமைப்புகளும் மிகுந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றன

2. 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் தெய்வீக ஆற்றலைப் பெற்று தெய்வீக நிலையை அடைந்த அமுதத் தமிழை மறுத்தும் வெறுத்தும் பகைத்தும் ஒதுக்கியும் செயல்படுகின்றவர்களை; எள் முனையளவு கூட அருட்சத்தி இல்லாதவர்களை எப்படி அமைச்சர் தெய்வத்திற்கு நிகரானவர்கள் என்று கூறலாம்? தமிழகத்தில் உள்ள சீயர்களும் (ஜீயர்கள்), பண்டாரசன்னிதானங்களும், குருமார்களும், குருக்கள்களும், பூசாறிகளும், அருளாளிகளும், மருளாளிகளும்........அருள் இல்லாதவர்களா? தெய்வீக அம்சம் இல்லாதவர்களா? ஆழ்வார்கள், நாயன்மார்கள், பூசாறிகள்,

அருளாளிகள், மருளாளிகள், குருமார்கள், குருக்கள்கள், அடிகளார்கள், சித்தியாளர்கள்......... முதலியோர்கள் வாழையடி வாழையென தமிழகத்தில் தோன்றி அருட்சோலைகளாக விளங்கும் போது; அமைச்சர் தமிழினத்தையே இழிவுபடுத்துவதுபோல் அன்னியரை தெய்வீக அம்சம் உள்ளவர்களாகப் புகழ்ந்ததற்கும் இ ம.இ. யும் அதனைச்சார்ந்த அமைப்புகளும் வருந்துகின்றன

செய்தி: ஆதாரம் தினமலர் 11-9-84 பக்கம் 2

(a) சென்னை செப் 10, ஆலய வழிபாடு இல்லை என்றால் மனிதன் மனிதனாக வாழ முடியாது'' என்று இந்து அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் கூறினார்.

(b) மேலும் அவர் ''இந்தத் தலைமுறை மக்களுக்கு குடமுழுக்கு என்றால் என்ன என்று தெரியவில்லை. ஆலயங்கள் அனைத்தும் புனருத்தாரணம் செய்யப்பட்டு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு விழா நடத்தப்பட வேண்டும்'' என்றும் கூறினார்.

வருந்துகிறோம் 1 தினமலரில் ''குடமுழுக்கு என்றாலே தெரியாத தலைமுறை; ஆர். எம். வீரப்பன் வேதனை'' என்று தலைப்பிட்டுச் செய்தி வருமளவுக்கு அறநிலைய அமைச்சரே பேசியிருப்பதற்கு இ. ம. இ. யும் இதனைச்சார்ந்த அமைப்புக்களும் மிக மிக வருந்துகின்றன.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இ. ம. இ. யும் அதன் அமைப்புக்களும் பாடுபட்டு பல நூறாயிரக்கணக்கான இளைஞர்களை இந்துமதம் என்றால் என்ன? அதை எவர்? எப்போது? எதற்காக? ஏன்? எவ்வெவ்வாறு தோற்றுவித்தனர்? அதிலுள்ள 48 வகையான வழிபாட்டு நிலையங்கள், வழிபடுநிலையினர், கருவறை மூலவர்கள், பூசாறிகள், ஆசாறிகள், ஆச்சாரியார்கள், கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள், தாத்தாக்கள், ஆத்தாக்கள், அம்மை அப்பன்கள், உலக அருளாளர்கள், தேவிகள், தேவதைகள், தேவர்கள், தேவ குமாரர்கள், தேவதூதர்கள், தோன்றல்கள், அருளாடு நாயகங்கள், மருளாடு நாயகங்கள் முதலிய அனைத்தும் பற்றி புரிந்து தெளிந்தவர்களாக்கியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அமைச்சர் குற்றம் சாட்டியிருக்கிறார். கிருபானந்த வாரியார் போன்றவர்கள் வாழ்நாள் முழுவதும் இந்துமதத்தைப் பேசுவதையே வயிற்றுப் பிழைப்பாக வைத்திருந்தும் கூட அவர் கூறிய கருத்துக்கு மறுப்பாக 1 'ஓர் இந்து மத விளக்கம்' 2 'அருளுலக ஆட்சிமொழி பற்றிய விளக்கங்கள்' என்ற இரண்டு புத்தகங்களையும் அச்சிட்டு வழங்கியவர்கள் இ. ம இ. இளைஞர்கள். இவர்கள் அவசரப்பட்டு அமைச்சருக்காக கருத்து விளக்கமளிக்க முற்பட்டுத் தேவையில்லா பிற நிகழ்ச்சிகளும், குழப்பங்களும் நடந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கையிலேயே இந்த வருத்தம் தெரிவிக்கும் அறிக்கை வெளிவருகிறது. அன்புகூர்ந்து நெடுங்காலம் நாத்திகராக இருந்த அமைச்சர் அவர்கள் அவசரப்பட்டு இந்து மதத்தை புரியாமல் எந்தக் கருத்தும் சொல்ல வேண்டாம்.

விளக்கம் (a) ஆலய வழிபாடு அனைவருக்கும் நல்லதல்ல. ஓகி, யாகி, யக்ஞ, வேள்வியோன், தவவல்லான், ஞானி, பத்தர், பத்தியார், போத்தர்,போத்தியார், புத்தர், புத்தியார், முத்தர், முத்தியார், சீவன் முத்தர், சீவன் முத்தியார், உருவ சித்தியார், அருவுருவசித்தியார், அருவ சித்தியார், முனிவர், இருடி......... என எண்ணற்ற பக்குவநிலையினர் இந்துமதத்தில் குறிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஆலய வழிபாடு செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை.

தொடரும்

குருதேவர்-மூலமாக விளக்கம் வழங்குபவர் சித்தரடியார் ஏ. இரவி

# சித்தர் இராமாயணம் (3)

## முன்னுரை — ஆய்வுக் கட்டுரை

இராமாயணமும், மகாபாரதமும் திரிந்ததும் பிரிந்ததும், வேருனதும் மாருனதும் எப்போது? எப்படி? ஏன்? எதற்காக? பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி சித்தர் அமராவதியாற்றங்கரைக் – கருவூரரின் குருபாரயபரிய, இலக்கிய பாரம்பரிய, அரச பாரம்பரிய வாசகங்களேயே இவ் வினக்களுக்கு பதிலாக வழங்கப்படுகின்றன.

இராமன், பதினென் சித்தர்களில் கருவூரரின் மகளான சோழமாதேவிக்கும் [சோழியாயி] பதினெண் சித்தர்களில் ஒருவரான காக்கையர் எனப்படும் காகபுசுண்டருக்குப் பிறந்த வாரிசுகளால் தோற்றுவிக்கப்பட்ட சூரியகுல மன்னனே. இம்மன்னர்களின் சூரிய அரசகுலம் (பாண்டிய அரசகுலம், பஃறுளியாறு, வைகை, வடயமுனேக்கரையில் இருந்தது--திங்கள் குலம்) இளமுறியாக் கண்டத்தில் குமரியாற்றங்கரையிலும், காவிரியாற்றங் கரையிலும புதிதாகத் தோன்றிய *வட-இமயப் பகுதியில் உள்ள வடகங்கைக் கரையிலும் (*தென் இமயமலே, இளமுறியாக் கண்டத்தில் இருந்தது. அதில் தென் கங்கை, தென்யமுனே.......என்ற ஆறுகள் இருந்தன) ஆட்சி புரிந்தது.

இதேபோலத் 'திங்களங்குலம்' 'சந்திரகுலம்' எனும் அரசகுலம் பதினெண் சித்தர்களில் ஒருவரான சித்தர் கருவூரருக்கும் குமரிக்கும் பிறந்த வாரிசுகளின் வழியாகவே தோன்றிற்று. இக்குலத்தார் குருகுலத்தார் என்று சிறப்பிக்கப்படுகின்றனர். ஏனெனில் பதினெண் சித்தர் பீடத்தைத் தோற்றுவித்தவருமான சிவனுக்கும் இளமுறியாக் கண்டத்து மலே நாட்டு மங்கைக்கும் பிறந்த முருகனுக்குத் தெய்வானே என்ற விண்வெளிப் பெண்ணும், வள்ளி என்ற மண்ணுலகப் பெண்ணும் மனேவியராகி முப்பத்திரண்டாண்டு அகவை முடிந்தும் வாரிசு இல்லாததால்; அவன் பதினெட்டுப்படைவீடுகளில் நிறைந்தான். (சித்தர்களுக்கு 6 படை வீடு+ தேவர்களுக்கு 6 படை வீடு + மானுடர்க்கு 6 படை வீடு = 18 படை வீடுகள்) அதன் பிறகு விண்ணவர்க்கும், மண்ணவர்க்கும் உறவு நீடிக்கும் உரிமையை நிலேநாட்ட பதினெண் சித்தர்களில் ஒருவரான கருவூரரே இம்மண்ணுலகப் பெண்ணுன குமரியை மணந்து சோழமாதேவி, குமரன் எனும் இரண்டு வாரிசுகளேத் தோற்றுவித்துக் குருகுலம் காத்தார் சித்தர் கருவூரர் மகள் சோழமாதேவிக்கும் (சோழியாயி) சித்தர் காக புசுண்டருக்கும் (காக்கையர்) தோன்றிய சூரிய குல மன்னர்களே கங்கைக்கரையிலும் ஆட்சி செய்தனர்

இவர்களின் பரம்பரையில் வந்தவனை இராமாயணத்தின் தலேவன் இராமதேவன் நவநாத சித்தர்களுள் ஒருவன். இவன் இரண்டாவது உகமான திரேதா யுகத்தில் வாழ்ந்தவன். இவனது உகம் 12, 90,000 ஆண்டுகள். இவனுக்குப் பிறகு பாரதப் பெருங்கதையின் தலேவன் கண்ணதேவன் நவநாத சித்தர்களின் வகையிலேயே தோன்றினன். இவனது உகமான துவாபரயுகம் 8, 64, 000 ஆண்டுகள்.

தமிழர்கள் தாங்கள் வழிபட்டு அருள் பெற வேண்டிய நவநாத சித்தர்களான இராமதேவரையும், கண்ண தேவரையும் மறந்து துறந்து செயல்பட ஆரம்பித்துப் பேரிழப்புக்குள்ளாகி விட்டார்கள். இம்மண்ணுலகில் சிவனும், முருகனும், மானுடர்கள் அரிதின் முயன்று தவத்தாலும் கடிய பத்தியாலும் காணக்கூடிய பதினெண் சித்தர்களாக உள்ளனர். அதே நேரத்து மக்கள் நினேத்தவுடன் அருளேப்பெற்று நன்மை பெற்றிடக்கூடிய நவநாத சித்தர்களாக இராம தேவரும், கண்ணதேவரும் இருக்கின்றனர்

– தொடரும்

# ஒற்றையடிப் பாதையல்ல!

இந்த மாதம் செப்டம்பர் 1984 (பீடம் 4 பணி 6) 'ஜகத்குரு' மாத இதழில் 5, 6-ம் பக்கங்களில் 'ஒற்றையடிப்பாதை' என்ற தலைப்பில் இந்துமதத்தை இழிவுபடுத்தக்கூடிய, அழிவுபடுத்தக்கூடிய, சீரழிக்கக் கூடிய கருத்தை காஞ்சிபுரத்து இரண்டாவது சங்கராச்சாரியார் திரு. செயேந்திர சரசுவதி அவர்கள் கூறியுள்ளார். அவரைக் கண்டிக்கின்றோம். அவரைத் திருத்துவதோடு இந்து மதத்தைப் பற்றி சரியாக அறியாத இந்து மக்களை திருத்துவதற்காக இந்துமதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர்களின் கருத்து இங்கே வழங்கப்படுகின்றது.

''இந்துமதம் ஓர் ஒற்றையடிப் பாதையல்ல! வட ஆரியர்கள் தங்களுடைய வேத நெறியும், சமசுக்கிருத மொழியும் இந்துமதத்துக்குள் இருக்கவேண்டும் என்பதற்காக இந்துமதத்தைப் பற்றிய தவறானச் செய்திகளை வெளியிட்டு வருகின்றார்கள்.

1. கலியுகம் பிறந்து 2000 ஆண்டுகள் கழிந்து இந்தியாவுக்குள் வந்த வட ஆரிய வேத நெறிக்கும் இந்துமதத்துக்கும் எள் முனையளவுகூட சம்பந்தம் இல்லை அதாவது வட ஆரியர்களின் வருகைக்கு முன்பே 43,76,000 ஆண்டு (அனாதிக்காலம் 4,85,920 + கிரேதாயுகம் 17,28,080 + திரேதாயுகம் 12,96,000 + துவாபரயுகம் 8,64,000 + கலியுகம் 2000 = 43,76,000) களுக்கு முன்னாலேயே விண்வெளியிலிருந்து இம்மண்ணுலகுக்கு வந்திட்ட பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகின் முதல் நிலப்பகுதியான இலமூரியாக் கண்டத்துப் பூர்விகக் குடிகளுக்கு வழங்கிட்டார்கள் இவர்கள் தங்களின் தாய்மொழியான தமிழ்மொழியிலேயே இந்துமதத்தின் அனைத்து விதமான கலைகளையும் சாத்திர சம்பிரதாயச் சடங்குகளையும், பூசாவிதிகளையும், நெறி முறைகளையும், ஒழுகலாறுகளையும் மற்ற தெய்விக மறைகளையும் வழங்கினார்கள். எனவே கலியுகம் பிறந்து 3000 ஆண்டுகள் கழித்து சித்தர்களால் வட ஆரியர்களுக்கு உருவாக்கித்தரப்பட்ட சமசுக்கிருத மொழிக்கும் இந்துமதத்துக்கும் சம்பந்தமே இல்லை தொடர்பே இல்லை.

இந்துமதம் ஒற்றையடிப்பாதையல்ல! இந்துமதம் ஓர் அரசபாட்டை(அரசவீதி) இதிலிருந்து பிரியும் சாலைகளும்; இதனோடு சேரும் சாலைகளும் ஏராளமாக உண்டு யானைப்படையும், தேர்ப்படையும், காலாட்படையும் அணிவகுத்துச் செல்லக்கூடிய மிகவும் சுறுசுறுப்பான அரசவீதியாகத் திகழும் இந்துமதத்தை இன்றைய காஞ்சி இரண்டாவது சங்கராச்சாரியார் 'ஒற்றையடிப் பாதை' என்றது மிகவும் இழிவானது, தரக்குறைவானது. இம்மண்ணுலகில் தோன்றும் அனைத்து மதங்களும் இந்துமதத்திலிருந்து பிரியும் கிளைச் சாலைகள் போன்றவை. இது தெரியாமல் இந்து மதத்தை ஒற்றையடிப் பாதை என்பது கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது, இழிவானது, பழியானது.

இந்துமதம் என்கின்ற அரசவீதி எங்கு ஆரம்பித்து எங்குபோய் முடிகின்றது? எங்கெங்கெல்லாம் செல்கின்றது? வழிநெடுக என்னென்ன நாடுகள், நகரங்கள், சோலைகள், சாலைகள், மலைகள், அருவிகள், காடுகள், கடல்கள், கலைக் கருவூலங்கள், தங்கும் விடுதிகள், விருந்தினர் மாளிகைகள், அங்காடிகள்...?!.....முதலியவையெல்லாம் இருக்கின்றன என்ற குறிப்புகள் மிகத்தெளிவாக பதினெண் சித்தர்களால் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்துமதம் என்கின்ற 'அரசவீதி' குறிப்புக்கள் பதினெண் சித்தர்களால் எண்ணற்ற அத்திரங்களாக, சாத்திரங்களாக, தோத்திரங்களாக நேத்திரங்களாக, நேமநியமநிட்டைகளாக, சுருதி ஆரண ஆகம மீமாம்சைகளாக, வாக்குகளாக, வாசகங்களாக, மறைமுறைநெறி வேதங்களாக, சித்தநாத போத ஓதங்களாக.....வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் முழுப் பூசணிக்காயை சோற்றில்

தொடர்ச்சி—7-ம்- பக்கம்

# அருட்பணி விரிவாக்கத் திட்ட உறுதிமொழி

1. பதினெண் சித்தர்களின் வாழ்வியல் நெறியான "சித்தர் நெறியே" இந்து மதம். இதில் கலந்து விட்ட மூட நம்பிக்கைகள், மடமைகள், கற்பனைகள்.......... முதலியவற்றை பயிற்சிகள் தருவதன் மூலம் அகற்றுவதே நோக்கம்.

2. உலக மதங்களுக்கு சித்தர் நெறியே தாய் எனவே, அவரவர் தத்தம் மதவழி வழிபட அனுபவப் பூர்வமான வழிபாட்டு முறைகளைக் கற்றுத் தருதலே நோக்கம்.

3. அமைதியுடன், அன்புடன், நிறைவுடன், நிம்மதியுடன் இல்லறம் இனிது அமைய உதவும் ஆன்மீக உண்மைகளை சித்தர் நெறி மூலம் விளக்கப்படுவதே நோக்கம்.

4. 'சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம்' மற்றும் 'உலக ஆன்மநேய ஒருமைப்பாடு' முதலியவற்றை உருவாக்குவதே நோக்கம்.

5. சித்தர்களின் ஒகாசன, யோகாசன பயிற்சி மூலம் உடல், உயிர், ஆவி, ஆன்மா முதலியவைகளை வளமாக்குதலும் வலிமையாக்குதலும் நோக்கமாகும்.

6. மருத்துவ உலகில் தெரியாமை, புரியாமை, அறியாமை, புதிர்......முதலியவை இருப்பதை முற்றிலும் மாற்றிடச் சித்தர்களின் மருத்துவக் கொள்கைகளை அனைவருக்கும் வழங்குதலே நோக்கம்.

7. மனித சமுதாய வேற்றுமைகள், ஏற்றத்தாழ்வுகள், மாறுபாடுகள், முரண்பாடுகள் குறைபாடுகள், பற்ருக்குறைகள், இயலாமைகள், வறுமைகள், தேக்கங்கள், வீக்கங்கள், முடக்கங்கள்........முதலிய அனைத்தையும் முற்றிலும் அகற்றிடச் சித்தர்களின் செய்திச் செழுமையிலும், கண்ணோட்டத்திலும் உலக வரலாறு, இலக்கியம், கலை, தொழில், முதலிய அனைத்துத் துறைகளையும் புதுப்பித்து எழுதுதலே நோக்கம்.

8. மானுட நல பாதிப்புகள், ஊழ்வினை, சூழ்வினை, ஆள்வினை, பாரம்பரியம், நாள், கோள், மீன், இராசி, கருப்பு, பேய், பிசாசு, ஆவி, கண்ணேறு,...முதலியவைகளின் ஆட்சியால் விளைகின்றன என்ற பேருண்மையை அடிப்படையாகக் கொண்டு அனைவருக்கும் நலம் விளைவிக்க அருட்பணி விரிவாக்கத்திட்ட யாகசாலைகள் மூலம் முயலுதலே நோக்கம்.

9. மதம், மொழி, இனம், வட்டாரம், கட்சி முதலியவைகளின் பெயரால் நிகழுகின்ற சர்வாதிகாரங்களையும், சுரண்டல்களையும், ஏமாற்றுக்களையும், அடிமை நிலைகளையும்........முழுமையாக அகற்றுதலே நோக்கம்.

10. நாத்திகத்தாலும், மதமறுப்பாலும், வெறுப்பாலும், மண்ணாட்டுத் துரோகத்தாலும், இன விரோதத்தாலும், தாய்மொழிப் பற்றின்மையாலும், நாட்டுப் பற்றின்மையாலும் ஏற்பட்டுவிட்ட இகழ்ச்சிகளை, தாழ்ச்சிகளை, வீழ்ச்சிகளை, இழப்புகளை ஈடுசெய்வதே நோக்கம்

K V S பிரிண்டர்ஸ், 10, தேரடி தெரு, பொன்னேரி.